செ.வெ.எண்.61 நாள்:23.09.2017

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றில் 60 கீ.மீ. தூரத்திற்கு இரு கரைகளிலும் இரண்டாம் கட்ட தூய்மைப் பணிகளில் சுமார் 10 ஆயிரம் மாணவ, மாணவிகள், 5 ஆயிரம் பல்வேறு துறை அரசு ஊழியர் சங்க பிரதிநிதிகள், பல்வேறு தொண்டு நிறுவனங்களில் பிரதிநிதிகள் என சுமார் 15 ஆயிரம் நபர்கள் பங்கேற்றனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

----

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றில் இரு கரை பகுதிகளிலும் பாபநாசம் முதல் திருநெல்வேலி நான்கு வழி சாலை ஆற்றுப்பாலம் வரை 60 பகுதிகளில் தூய்மைப்படுத்தும் பணிகள் இன்று (23.09.2017) நடைபெற்றது. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தாமிரபரணி கரை பகுதியில் தூய்மைப்படுத்தும் பணிகள் தொடக்க நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்நீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன் அவர்கள் ஆகியோர் தூய்மைப்பணிகளை தொடங்கி வைத்து பங்கேற்றனர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் தூய்மை சேவை பணிகளை தொடங்கி வைத்துள்ளார்கள் திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றுப்பகுதியில் முதற்கட்டமாக திருநெல்வேலி மாநகராட்சி கருப்பன்துரை முதல் வண்ணார் பேட்டை ஆற்றுப்பாலம் வரையுள்ள பகுதிகளில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இன்று இரண்டாம் கட்டமாக பாபநாசம் முதல் திருநெல்வேலி நான்கு வழி புறவழிச்சாலை பாலம் வரையிலான 60 கீ.மீ தூரத்திற்க்கு இரண்டு கரை பகுதிகளையும் சேர்த்து 120 கீ.மீ அளவிற்கு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இப்பணிகளில் 30 கல்லூரிகள் 20 பள்ளிகளை சேர்ந்த சுமார் 10 ஆயிரம் மாணவ, மாணவிகளும், வருவாய்த்துறை சங்கம், ஆசிரியர் கூட்டமைப்பு, காவல்துறை பணியாளர்கள், தீயணைப்புத்துறை பணியாளர்கள் மற்றும் பல்வேறு அலுவலர்கள், பல்வேறு தொண்டு நிறுவனங்களை சேர்ந்த 5 ஆயிரம் நபர்களும் என சுமார் 15 ஆயிரம் நபர்கள் தூய்மை பணியில் ஈடுபட்டுள்ளனர். முன்னதாக நேற்று 50 க்கு மேற்பட்ட ஜேசிபி, கிட்டாஜி இயந்திரங்கள் மூலம் முற்புதர்கள், ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணிகள் செய்யப்பட்டுள்ளது. கல்லூரி மாணவ, மாணவிகள் தூய்மை பணிகள் மட்டுமின்றி கரையோர பொதுமக்கள் ஆற்றினை தூய்மையாக வைத்துக் கொள்வது குறித்தும், தன் சுத்தம் திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்தும் விழிப்புணர்வு பணிகளையும் மேற்கொண்டனர். தாமிரபரணி சுத்தப்படுத்தும் பணிகள் இனி ஒவ்வொரு மாதமும் நடத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின் படி நீர்நிலை பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேற்றும் பல்வேறு பகுதிகளில் தாமிரபரணி ஆற்றங்கரை பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளது. - என தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மணிமூர்த்திஸ்வரர் கோயில், உடையார்பட்டி, சிந்துபூந்துரை, உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் துப்புரவு பணிகளை நேரில் பார்வையிட்டார். இப்பணிகளில் ஈடுபட்ட மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி ஊக்கப்படுத்தினார். மேலும் பொதுமக்களிடம் ஆற்று பகுதியினை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் பயிற்சி திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, அண்ணா பல்கலைக்கழக முதல்வர் திரு.சக்திநாதன், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.கனகராஜ், முக்கிய பிரமுகர்கள் திரு.கபிரியல் ராஜன், திரு.சேர்மபாண்டியன், திரு.மதியழகன், திரு.பெரியபெருமாள், திரு.குனம் ஜெயராமன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.ராமசுப்பிரமணியன், வட்டாட்சியர்கள் திரு.தங்கராஜ், திரு.பால்த்துரை, செஞ்சிலுவை சங்க திருநல்வேலி தலைவர் டாக்டர் சார்லி பிரேம்குமார் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.